முருகப்பெருமான் துணை

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

15.08.2024

1. பேருலகம் தரும பூமியாகவே
புண்ணிய வழிகாட்டும் அம்சமாக
ஆறுமுகப் பெருமான் என்னை
அரங்க மகானாக அவதரிக்கச் செய்து

2. செய்துமே பிரணவக்குடில் படைத்து
சித்திகள் அருளி அன்னதான சேவையே
மெய்ஞானமாக்கி தருமம் பெருக்கி
முக்தி அருளி சரவண சோதியுள் கலந்திட அருளிய

3. அருளிய வேலவா உமை போற்றி
அரங்கமகான் யானும் இனிதே
வரமென குரோதி ஆடி திங்கள்
வழங்குவேன் பஞ்ச குருவார ஆசி

4. ஆசிதனை சன்மார்க்க மக்கள்
அனைவரும் தேற்றம் கண்டிட
ஆசி தருவேன் சோதி சொரூபமாக
ஆற்றல்மிக்க பிரணவக்குடில் தன்னை

5. குடில் தன்னை ஞானியர் படைகள்
குறைவின்றி காத்து வருக
தேடிவந்து கலியுக மக்களெல்லாம்
தேசிகா அரங்கா முருகா என வேண்ட

6. வேண்டிய அக்கணமே மாற்றம்
வினை வென்று அவரவர்க்கும்
உண்டாகும் நற்பலன்களாக
உண்மைபட சரணாகதி இருக்க

7. இருக்கவே வேண்டும் மாந்தருக்கு
எல்லாம் வெற்றி காண நேரும்
கருத்தாக கல்வி கேள்வி ஞானம்
கண்டடைய தம் சேய்களை

8. சேய்களை அரங்கன் என் தடம்
சேவிக்க வைக்க சிறப்புத் தேர்ச்சி
மெய்ஞானம் கண்டு சிறப்பர்
மேலான பணி பதவி வேண்டி

9. வேண்டி என் தடம் வந்துமே
வினை வெல்லும் தருமபலத்தில்
தொண்டோடு பொருளுதவி செய்ய
திடபணி உயர் பதவி எண்ணம் வழி

10. வழி கண்டு உலகில் தேறுவர்
வரமென சோதி வழிபாடு காண
அழிவிலா பேரானந்த கதி
அகிலத்தார் அனைவரும் கண்டு உயர்வர்
அரங்கமகான் என் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–